## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக
# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

4 - 12 -2025



**புதுடெல்லி, டிச. 6 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத் தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (4.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்புகள். தடுப்பதற்கு உடனடி தீர்வு என்ன?**

**ஆ. இராசா கேள்வி**



நாட்டில் 2024 ஆம் ஆண்டில் மட்டும் சாலை விபத்துகளால் 1,80, 000 உயிர்கள் இழந்ததை குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

சாலை விபத்து இறப்புகளை குறைக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) இலக்கை மீறாமலும் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் எந்த அளவுகோளில் இறப்பு விகிதங்கள் ஒப்பிடப்படுகிறது? வடிவமைப்பு குறைபாடுகள் கண்டறிந்து சரி செய்யவும் அறிவியல் சாலைப் பாதுகாப்பு தணிக்கைகளை மேற்கொள்ளவும் முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுடன் பாதுகாப்பான சாலைகளைப் பொறியியல் ரீதியாக வழங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் சாலைப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட மொத்த நிதி மற்றும் அவற்றின் செலவு விவரங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

**2. கீழடி ஆய்வு முடிவுகளை வெளியிடாதது ஏன்?**

**திருச்சி சிவா கேள்வி**



கீழடி ஆய்வு முடிவுகளை பதிப்பிக்க ஒன்றிய அரசு தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடுவதை குறிப்பிட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர், தொல்பொருள் ஆய்வு முடிவுகளை உரிய நேரத்தில் பதிப்பிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? அறிக்கைகளை சமர்ப்பித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் வெளியிடுவதற்கு வழக்கமான காலக்கெடு என்ன? சரியான நேரத்தில் வெளியிடுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அமைச்சகம் வகுத்திருக்கும் கொள்கைகள் என்ன? கீழடி முடிவுகளை எப்போது வெளியிட திட்டமிட்டிருக்கிறது என பல்வேறு கேள்விகளையும் அவர் கேட்டுள்ளார்.

**3.கரையோர சதுப்பு நிலக்காடுகளின் பாதுகாப்பையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்வீர்!**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**



தமிழ்நாட்டில் கரையோர சதுப்பு நில காடுகளிலிருந்து நிலையான வருமானத்தை உருவாக்கும் MISHTI திட்டம் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட மொத்த பரப்பளவு, மீட்டெடுக்கப்பட்ட மற்றும் மீட்டெடுக்கப்படும் பகுதிகள், நிறைவு செய்வதற்கான காலக்கெடு உட்பட பல்வேறு விசயங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார். மேலும் பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் மீட்டெடுக்கப்பட்ட சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளின் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் மீனவர்கள், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு முயற்சிகளின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4.வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள். நடவடிக்கை என்ன?**

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி**



வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நலத்திட்டங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு என்ன? அத்தகைய சலுகைகளைப் பெற முயற்சி செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றை பெற்றவர்களின் எண்ணிக்கையை அவர்கள் வசிக்கும் நாடுகளை குறிப்பிட்டு வெளியிட வேண்டும் என்றும் இந்தியத் தொழிலாளர்களுக்கு அதிக தேவை உள்ள நாடுகளில் இந்தத் திட்டங்களை விரிவுபடுத்தத் அரசிடம் திட்டம் இருக்கிறதா என்றும் அவர் கேட்டுள்ளார்.

**5. நம் மீனவர்களை தண்டிக்கும் இலங்கை அரசை கண்டிக்க தவறும் மோடி அரசு**

**பி.வில்சன் கண்டனம்**



இந்திய மீன வர்களைக் குற்ற வாளிகளாக்கி அதிக அபராதம் விதிக்கும் 2023ஆம் ஆண்டு மீன்வள மற்றும் நீர்வாழ் வளங்கள் (திருத்தம்) சட்டத்தின் பிரிவுகள் 14(O) மற்றும் 49 குறித்து இலங்கை அரசிடம் ஒன்றிய அரசு பேச்சு வார்த்தை நடத்தியதா என கேட்டு திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான பேச்சு வார்த்தை மூலம் இந்தச் சட்டங்களை ரத்து செய்ய அல்லது திருத்தம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

2014 முதல் 3800 க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் இந்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேள்விகள் கேட்டுள்ளார்.

**6. நீதித்துறையில் சமூகநீதி இல்லாதது ஏன்?**

**ராஜாத்தி சல்மா கேள்வி**



உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பிற்படுத்த ப்பட்ட பட்டியலின மற்றும் சிறுபான்மை யினரின் பிரதிநித்துவம் 23 சதவீதம் மட்டுமே உள்ளது. மீதமுள்ள 77 சதவீதம் உயர் சாதி வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதை குறிப்பிட்டு முறையான பிரதிநிதித்துவம் அமையாதது ஏன் என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்கு போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதையும் உயர் நீதித்துறையில் இடஒதுக்கீட்டைக் கொண்டுவருவதையும் கருத்தில் கொண்டு ஒன்றிய அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

**7. வீட்டு உபயோக எல்பிஜி பயன்பாட்டில் சரிவு ஏன் ?**

**தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி**



சமையல் எரிவாயுவிற்கான மானியங்களை ஒன்றிய அரசு குறைத்ததற்கு பிறகு வீடுகளில் சமையல் எரிவாயு பயன்பாடும் குறைந்திருப்பதை சுட்டிக்காட்டி திமுக தென்சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீடுகளுக்கு எல்பிஜி சிலிண்டர்களின் மலிவு விலையை உறுதி செய்வதற்காக உஜ்வாலா மற்றும் இதர மானிய திட்டங்களின்கீழ் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? மற்றும் மாசுபடுத்தும் எரிபொருட்களுக்கு மீண்டும் மாறுவதைத் தடுக்க முன்மொழியப்பட்ட மாற்று நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8.மோசமான நிலையில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள். நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசுக்கு கண்டனம்.**

**டாக்டர் கலாநிதி வீராசாமி**



தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை45 (NH45), தேசிய நெடுஞ்சாலை32 (NH32) மற்றும் தேசிய நெடுஞ்சாலை44 (NH44) உள்ளிட்ட பல தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு மிக மோசமாக உள்ளதை குறிப்பிட்டு திமுக வட சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டில் தற்போது பழுது பார்க்கும் வேலைகள் நடைபெறும் அல்லது பராமரிப்பு நிலுவையில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் எவ்வளவு? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு? இந்த நெடுஞ்சாலைகளின் ஆய்வு மற்றும் தர தணிக்கைகளை அதிகரிக்க அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன? காலக்கெடுவிற்குள் பராமரிப்பு, தரமான பொருட்களின் பயன்பாடு மற்றும் ஒப்பந்த தாரர்களின் பொறுப்புணர்வை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**9. விபத்துகளை அதிகப்படுத்தும் பராமரிப்பு இல்லாத தேசிய நெடுஞ்சாலைகள்!**

**ஈஸ்வரசாமி குற்றச்சாட்டு**



கடந்த ஐந்து ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் விவரங்கள் கேட்டு திமுக பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

இந்தக் காலகட்டத்தில் நெடுஞ்சாலை விரிவாக்கம், மேம்படுத்தல் மற்றும் சாலைப் பாதுகாப்புக்காக அரசாங்கம் வகுத்திருக்கும் சிறப்புத் திட்டங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநில வாரியாக தேசிய நெடுஞ்சாலைகளில் பதிவான விபத்துகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் அடையாளம் காணப்பட்டுள்ள அதன் முக்கிய காரணங்கள் என்ன? மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்புகள் (ATMS) நிறுவப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளின் எண்ணிக்கை மற்றும் இடம் குறித்த விவரங்கள் அதற்கான மொத்த செலவுகளுடன் சேர்த்து எவ்வளவு? அனைத்து தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளுக்கும்

ATMS கவரேஜை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

**10.வெள்ள அபாய எச்சரிக்கையை புறந்தள்ளிய ஒன்றிய அரசு! நடவடிக்கை என்ன?**

**எஸ்.ஜெகத்ரட்சகன் கண்டனம்.**



தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் சமீபத்திய எச்சரிக்கையின் படி ஒன்றிய அரசு சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காதது குறித்து திமுக அரக்கோணம் தொகுதி மக்களவை உறுப்பினர் ஜெகத்ரட்சகன் குற்றம் சாட்டியுள்ளார்.

நகர்ப்புற வெள்ள அபாய மேலாண்மைத் திட்டத்தின் (UFRMP) செயல்பாடுகள் குறித்த விவரங்கள் மற்றும் இதுவரை அடைந்த இலக்குகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார். திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, காலநிலை மற்றும் பருவமழை சவால்களை எதிர்கொள்ளும் வகையில், நாடு முழுவதும் நகர்ப்புற வெள்ள மேலாண்மை மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்களையும் அவர் கேட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொளி வாயிலாக திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ் டோல்கேட் அருகில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு 1.03.2025 அன்று அடிக்கல் நாட்டி அதனைத் தொடர்ந்து மிக விரைவாக நடைபெற்று வரும் கட்டிடப் பணிகளை ஒவ்வொரு கட்டமாக தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். திருச்சிராப்பள்ளி, டி.வி எஸ் டோல்கேட் பகுதியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைய உள்ளது. நிகழ்வின் போது மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் மற்றும் கட்டிட பொறியாளர்கள் அரசு உயர் அதிகாரிகள் வல்லுனர்கள் உடன். இருந்தனர்.

## கோவை, மதுரை மாநகரங்களுக்கு மெட்ரோ ரயில் திட்ட அனுமதி மறுப்பு:
# மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யலாமா?
## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கண்டனம்!

**புதுடெல்லி, டிச. 6 -**

**கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுத்த ஒன்றிய அரசின் முடிவுக்கு தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி., கண்டனம் தெரிவித்தார்.**

இதுதொடர்பாக மாநிலங்களவையில் சிறப்பு கவன ஈர்ப்பு மூலம் அவர் பேசியதாவது:

மதுரை மற்றும் கோயமுத்தூர் மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களை அமல்படுத்த அனுமதி கேட்டு தமிழ்நாடு அரசு வைத்த கோரிக்கையை நிராகரித்து ஒட்டு மொத்த தமிழ்நாட்டுக்கும் அநீதி இழைத்த ஒன்றிய அரசின் போக்கை கண்டிக்கவே இங்கே பேசுகிறேன்.

ஜவுளி மற்றும் உற்பத்தித் துறையில் சிறந்து விளங்கி, பல்லாயிரக் கணக்கான வேலை வாய்ப்புகளையும், ஏற்றுமதி வாய்ப்புகளையும் உருவாக்கி தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று போற்றப்படும் மாநகரம் கோயமுத்தூர். கோவில் கட்டடக் கலைக்காகவும், பாரம்பரிய கலாச்சாரத்திற்காகவும் உலகப் புகழ் பெற்றதுடன், ஆண்டுதோறும் லட்சக் கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பெருமை பெற்ற மாநகர் மதுரை. இவை ஏதோ ஒரு மாநிலத்தில் அமைந்த வட்டாரப் பகுதிகள் அல்ல. இந்த தேசத்தின் கலாச்சாரப் பெருமைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் துணை நிற்கும் மாநகரங்கள்.

மறைந்த தலைவர்கள் தொடங்கி இன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வரையிலான தலைவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அயராத உழைப்பின் காரணமாக இன்று தமிழ்நாடு அபரிமித மன வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அவர்களின் சிந்தனையில் உதித்துதான், சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், தொழிற்சாலைகள், நகரமயமாக்கல் என அத்தனையும் நிறைவேறி மக்கள் வசதியான வாழ்க்கையை எளிதில் பெற வழிவகை செய்தது. தமிழ்நாட்டில் சாதாராண பொதுமக்களுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கின்றன.

இப்படி பெருமைமிகு பின்னணிகள் இருந்தும் ஒன்றிய அரசு கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுத்திருக்கிறது. காலாவதியான 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை ஆதாரமாக வைத்து, மாற்றான் தாய் மனப்பான்மையுடனும், அலட்சியப் போக்குடனும் ஒன்றிய அரசு இந்தச் செயலை செய்திருக்கிறது. ஒன்றிய அரசின் இந்தப் போக்கால் அந்த மாநகரங்களின் பொருளாதார வளர்ச்சியும் உட்கட்டமைப்பு வசதிகளும் ஸ்தம்பிக்கும் ஆபத்து இருக்கிறது.

இந்த மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான அனுமதி மறுப்பு என்பது அதிகாரிகளின் தவறோ, தவறான கொள்கை முடிவோ அல்ல... லட்சக் கணக்கான மக்களின் ஏக்கங்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல். பாதுகாப்பான, நவீன, நிரந்தர போக்குவரத்து வசதியைப் பெறவிடாமல் அவர்களைத் தடுக்கும் செயலாகும்.

கோவை, மதுரையை விட குறைவான மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் பிற நகரங்களுக்கு மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படும்போது தமிழ்நாட்டின் முக்கியமான இந்த மாநகரங்களுக்கு மட்டும் ஏன் இந்த மாறுபட்ட பார்வை மற்றும் விரும்பத்தகாத முடிவு?



தனித்த பார்வையுடன் அணுகப்பட்ட இந்த அனுமதி மறுப்பு விஷயம், நேர்மையான, சமநிலையுடன் கூடிய தேசிய வளர்ச்சிக்கு எதிரானதாகும். நீதி, சம வாய்ப்பு, வளர்ச்சி என்பதெல்லாம் வெறும் காகிதத்திலும், அரசியல் பேச்சுக்களிலும் இல்லாமல், மக்களின் வாழ்க்கையில் அவை பிரதிபலிக்கும் வகையில் ஒன்றிய அரசு உடனே செயல்பட்டு, கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களை அமல்படுத்த உரிய உத்தரவுகளைப் பிறப்பித்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வு களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி., பேசினார்.



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஈரோடு கூரபாளையம் நந்தா இயன்முறை கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி வழங்கினார். மேலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட ஓவிய போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், உதவி ஆட்சியர் பயிற்சி காஞ்சனா சௌதரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ச.பூபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வி.எம். தண்டபாணி
## டிசம்பர் 6 (2012)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தென்சென்னை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும், மயிலைப் பகுதி துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

முரசொலி நாளிதழின் செய்தியாளராகவும் – மருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆக்கனூர் செ. பாரதிராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில் மங்களூர் கிழக்கு ஒன்றியம் ஆக்கனூர், வாகையூர், பாளையம், இடைச் செல்வாய், கீழச்செருவாய் ஆகிய ஊராட்சிகளில் உள்ள தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி, காய்கறி வேட்டி, சேலை மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீர.அமிர்தலிங்கம் முன்னிலையில் கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி. வெ.க. வெங்கடேசன் வழங்கினார். உடன் இளைஞர் அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.